# "பெண் திரைப்பட பாடலாசிரியர் தாமரையின் திரைப்பட பாடல்களில் பெண்மை பற்றிய வெளிப்பாடு – ஒரு பெண்ணிய மெய்யியல் நோக்கு"

LIBRARY
22 DEC 2023
EUSL, SRI LANKA

பெயர்: வில்லியம் யேசுதாசன் எப்சிபா

பதிவு இலக்கம்: **EU/IS/2016/AC/680**

சுட்டெண்: **CS 7580**

தத்துவம் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை சிறப்புக் கற்கையின் கலைமாணிப் பட்டத்தின் ஒரு பகுதித் தேவையினை நிறைவு செய்யும் பொருட்டு கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

FAC 1264
Project Report
Library - EUSL

தத்துவம் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

2023

# ஆய்வுச் சுருக்கம்

ஒவ்வொரு காலகட்டத்திலும் வெவ்வேறு விடயங்களை ஆய்வுப் பொருளாகக் கொண்டு வளர்ச்சி பெற்று விளங்கும் ஒரு துறையாக மெய்யியல் துறை காணப்படுகின்றது. இந்த துறையானது பல்வேறு துறைகளிலும் பரிணமித்து விரிந்ததாக உள்ளது. அந்தவகையில் மெய்யியலின் பிரதான பிரிவுகளில் ஒன்றாக பெண்ணிய மெய்யியலைக் குறிப்பிடலாம்.

தற்காலத்தில் அதிக முக்கியத்துவம் பெற்ற ஒரு கலை வடிவமாக விளங்குகின்ற திரைப்படங்களில் வருகின்ற திரைப்படப் பாடல்களும் பெண்ணிய சிந்தனைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவனவாக அமைந்து விடுகின்றன. திரைப்பட பாடல்களில் பெண்களை ஆபாசமாகவும் போகப் பொருளாகவும் காண்பிக்கின்ற ஆண்மைய சிந்தனைகளைத் தான் சமூகத்தில் அனைவரும் விரும்புவதாகவும் அதிக வருமானத்தை பெற்றுக் கொடுப்பதாகவும் உள்ளமையினால் ஆண்மைய வாத வெளிப்பாடு முதன்மை பெற்றுக் காணப்படுகின்றது. எனவே இன்றைய திரைப்படப் பாடல்களில் ஆண்கள் பெண்களை பொழுதுபோக்கிற்கான காட்சிப்பொருளாக மட்டும் பார்க்கின்ற தன்மையைக் காண முடிகின்றது.

திரைப்பட பாடல்களை இதுவரை காலமும் எழுதியவர்களில் பெரும்பாலானோர் ஆண்களாக இருந்தமையினால் திரையுலகில் பெண் பாடலாசிரியராக தாமரையின் அறிமுகம் அவரை முக்கியமான ஒருவராகக் காண்பிக்கின்றது எனலாம். பாடலாசிரியர் தாமரை பெண்களின் உணர்வுகளை மதிக்கும் விதத்திலான பெண்ணிய சிந்தனைகளைக் கொண்டவர் என்பதனாலும் ஒரு பெண் எப்படி உலகத்தைப் பார்க்கிறார் என்பதை இவருடைய பாடல்களில் நோக்கக் கூடியதாகவுள்ளதுடன் இவரது பாடல் வரிகளுக்கான மொழிப் பயன்பாட்டிலும் பெண்ணியத் தன்மையைக் காண முடிகின்றது.

பாடலாசிரியர் தாமரை தனது திரைப்பட பாடல் வரிகளில் பெண்ணிய நோக்கினை எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார் என்பதனையும், இவரது திரைப்பட பாடல்களில் ஏனைய ஆண் பாடலாசிரியர்களை விட எந்தளவிற்குத் தனித்துவமான பெண்ணிய சிந்தனைகளை வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்பதனையும் ஆராய்வதனை பிரதான நோக்கமாகவும், ஏனைய ஆண் பாடலாசிரியர்கள் பெண்மையினை வெளிப்படுத்தியிருப்பதைக் காட்டிலும் பாடலாசிரியர் தாமரையின் திரைப்பட பாடல்களில் பெண்மை பற்றிய வெளிப்பாடு கொண்டிருக்கும் சிறப்பு அம்சங்களை வெளிக் கொண்டுவருவதனையும் திரைப்பட பாடல் வரிகளில் பெண்களை ஆபாசமாக வெளிக்காட்டுவதன் மூலம் சாதிப்பது பெண்ணியம் அல்ல என்பதனை விளக்குவதனையும் பெண்மையின் சிறப்புத் தன்மையினை பாடல்களில் வெளிப்படுத்துவதனால் ஆணும் பெண்ணும் ஒன்றுக்கொன்று சமமானவர்கள் என்பதனை உணர்த்துவதனையும் ஆண்களின் ஆண்மைய போக்கில் மாற்றங்களை ஏற்படுத்துவதாக தாமரையின் பாடல்கள் அமைந்துள்ளனவா? என்பதனை

ஆராய்வதனையும் நோக்காகக் கொண்டு பாடலாசிரியர் தாமரையின் திரைப்பட பாடல்களில் பெண்மை பற்றி அதிகம் பேசுகின்ற குறிப்பிட்ட சில பாடல்கள் தெரிவு செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின் முறையியலில் தரவு சேகரித்தல், தரவு பகுப்பாய்வு செய்தல் போன்றவை அடிப்படையாக காணப்படுகின்றன. அதன் அடிப்படையில் இந்த ஆய்வின் முதலாம் நிலைத் தரவுகளாக பாடலாசிரியர் தாமரையின் திரைப்படப் பாடல்களில் இருந்து பெண்மையை அதிகம் வெளிப்படுத்துகின்ற குறிப்பிட்ட சில பாடல்களின் பகுப்பாய்வும், இரண்டாம் நிலைத் தரவுகளாக புத்தகங்கள், ஆய்வறிக்கைகள், சஞ்சிகைகள், கட்டுரைகள் போன்றவைகளும் மூன்றாம் நிலைத் தரவாக இணையத்தளங்களும் ஆய்விற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

எனவே இந்த ஆய்வானது ஏனைய ஆண் பாடலாசிரியர்களின் பாடல்களில் காணப்படுகின்ற ஆண்மைய வாத சிந்தனைகளிலிருந்து வேறுபட்டதாக பாடலாசிரியர் தாமரை பெண்ணிய நோக்குகளை அவரது பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார் என்பதனை விளக்கும் வகையில் தாமரையின் பாடல்களில் குறிப்பிட்ட சில பாடல்களை மட்டும் ஆதாரமாகக் கொண்டு இந்த ஆய்வு அமைந்துள்ளது. பெண் பாடலாசிரியர்கள் மட்டுமன்றி ஆண் பாடலாசிரியர்களும் பெண்ணிய சிந்தனைகளை பாடல்களில் வெளிப்படுத்த வேண்டியது அவசியமாக உள்ளது. சினிமா பரந்து விரிந்த ஒரு துறை என்பதனால் பெண்ணிய ஒடுக்குமுறைகள், பெண்கள் மீதான வன்முறைகள், துஷ்பிரயோகங்கள் என்பன ஏற்படாது பெண்கள் மீது ஆண்களுக்கு மதிப்பும் மரியாதையும் ஏற்பட வாய்ப்பினை ஏற்படுத்துவதாக இது அமையலாம்.

**திறவுச் சொற்கள்** - பெண்ணியம், திரைப்படம், ஆண்மைய சிந்தனைகள், தாமரை, திரைப்பட பாடல்கள்

# பொருளடக்கம்

**Declaration** ........ i

உறுதியுரை ........ ii

முன்னுரை ........ iii

நன்றியுரை ........ iv

ஆய்வுச் சுருக்கம் ........ v

பொருளடக்கம் ........ vii

அத்தியாயம் ஒன்று

1.0 ஆய்வு முன்மொழிவு ........ 1

1.1 ஆய்வுத் தலைப்பு ........ 1

1.2 ஆய்வு அறிமுகம் ........ 1

1.3 ஆய்வுப் பிரச்சினை ........ 3

1.4 ஆய்வின் நோக்கங்கள் ........ 4

1.5 ஆய்வுக் கருதுகோள் ........ 5

1.6 ஆய்வின் வரையறைகள் ........ 5

1.7 ஆய்வின் முக்கியத்துவம் ........ 5

1.8 ஆய்வு முறையியல் ........ 6

1.9 இலக்கிய மீளாய்வு ........ 6

1.10 ஆய்வு அத்தியாய ஒழுங்கமைப்பு ........ 11

அத்தியாயம் இரண்டு

2.0 பெண்ணியம் ஓர் அறிமுகம் ........ 13

2.1 பெண்மையும், பெண்ணியமும் ........ 13

2.2 பெண்ணிய மெய்யியல் அறிமுகம் ........ 18

2.3 பெண்ணியம் தொடர்பான வரைவிலக்கணங்கள் ........ 20

2.4 பெண்ணிய சிந்தனையாளர்கள் ........ 21

2.4.1 மேரி வோல்ஸ்டன் கிராப்ட் ........ 21

2.4.2 ஜான் ஸ்டுவர்ட் மில் ........ 23

2.4.3 சைமன் டி பெவாயர் ........ 24

2.4.4 பெட்டி ஃப்ரைடன் ........ 25

2.4.5 கேட் மில்லட் ........ 27

2.4.6 லூஸ் இரிகேரே ........ 28

2.4.7 லோரா மால்வே ........ 30

2.5 பெண்ணிய வகைகள் ........ 32

2.5.1 தாராளப் பெண்ணியம் .................... 32

2.5.2 சமதர்ம பெண்ணியம் .................... 34

2.5.3 தீவிரவாதப் பெண்ணியம் .................... 38

அத்தியாயம் மூன்று

3.0 சினிமா மற்றும் சினிமா பாடல்கள் ஓர் அறிமுகம் .................... 42

3.1 சினிமா பற்றிய அறிமுகம் .................... 42

3.2 தமிழ் சினிமா வரலாறு .................... 46

3.3 திரைப்படங்களின் வகைகள் .................... 49

3.3.1 சித்திரிப்பு திரைப்படங்கள் .................... 50

3.3.2 காட்டுன் திரைப்படங்கள் .................... 50

3.3.3 ஆவண திரைப்படங்கள் .................... 51

3.3.4 உளவியல் சார் திரைப்படங்கள் .................... 52

3.3.5 குறுந்திரைப்படங்கள் .................... 52

3.3.6 ஆவண நாடகம் .................... 53

3.4 திரைப்படமும் தொழில்நுட்பமும் .................... 53

3.4.1 ஸ்குறுட்டன் .................... 53

3.4.2 செர்கி ஐசன்ஸ்டைன் .................... 54

3.4.3 அரன்ஹேம் .................... 55

3.4.4 பேலாபாலாஸ் .................... 55

3.4.5 பெஞ்சமின் .................... 55

3.4.6 ஆந்திரே பேஸின் .................... 56

3.4.7 போர்ட்வெல் .................... 57

3.4.8 பாரம்பரிய திரைப்பட கோட்பாட்டாளர்கள் .................... 57

3.5 திரைப்படமும் நோக்கமும் .................... 58

3.5.1 ரோஜர் ஸ்குறுட்டன் .................... 58

3.5.2 தியோடோர் அடோனோ .................... 58

3.6 திரைப்படமும் இரசிகர்களும் .................... 59

3.6.1 பெஞ்சமின் .................... 59

3.6.2 நோயல் கரோல் .................... 60

3.7 தமிழ் சினிமாப் பாடல்களின் தோற்றமும் வளர்ச்சியும் .................... 61

3.8 தமிழ் சினிமாப் பாடலாசிரியர்கள் .................... 65

அத்தியாயம் நான்கு

4.0 பாடலாசிரியர் தாமரை பற்றிய அறிமுகம் .................... 67

4.1 தாமரையின் வாழ்க்கை .................... 67

4.2 பாடலாசிரியர் தாமரையின் இசைப்பயணம்....71
4.3 பாடலாசிரியர் தாமரையின் பாடல்களில் முக்கியம் பெறும் நிபந்தனைகள்....72
4.4 பாடலாசிரியர் தாமரை பெற்றுக் கொண்ட விருதுகள்....73
4.4.1 தென்னிந்திய பிலிம்பேர் விருதுகள்....73
4.4.2 தமிழ்நாடு மாநில திரைப்பட விருதுகள்....73
4.4.3 ஆனந்த விகடன் சினிமா விருதுகள்....73
4.4.4 விஜய் விருதுகள்....74
4.4.5 ஏனைய விருதுகள் மற்றும் அங்கீகாரம்....74
4.5 பாடலாசிரியர் தாமரையின் சினிமா பாடல்கள்....74
4.6 தாமரையின் சினிமா பாடல்கள் தவிர்ந்த ஏனைய படைப்புக்கள்....79

## அத்தியாயம் ஐந்து

5.0 பாடலாசிரியர் தாமரையின் திரைப்பட பாடல்களில் பெண்மை பற்றிய வெளிப்பாடு – ஓர் பகுப்பாய்வு....80
5.1 ஆண்மைய வாதமும் திரைப்பட பாடல்களும்....80
5.2 பாடலாசிரியர் தாமரையும் பெண்மைய வாத சிந்தனைகளும்....91
5.3 பாடலாசிரியர் தாமரையின் பாடல்களும் பாடல்களின் உத்திகளும்....99
5.4 பாடலாசிரியர் தாமரையின் திரைப்பட பாடல்களும் மனித உறவுகளும்....102
5.4.1 தந்தை மகளுக்கு உள்ள உறவை சிறப்பாக வெளிப்படுத்தும் தாமரை பாடல் 102
5.4.2 தாய் மகனுக்கு உள்ள உறவை சிறப்பாக வெளிப்படுத்தும் தாமரை பாடல்....103
5.5 ஆண் பெண் சமத்துவம் மற்றும் ஒடுக்குமுறையற்ற சமூக நோக்கத்தைக் கொண்ட தாமரையின் பாடல்....106

## அத்தியாயம் ஆறு

6.0 ஆய்வின் தொகுப்புரை, கருதுகோள் பரிசீலனை மற்றும் முடிவுரை....108
6.1 அறிமுகம்....108
6.2 தொகுப்புரை....108
6.3 கருதுகோள் பரிசீலனை....111
6.4 முடிவுரை....112
உசாத்துணைகள்....114
பின்னிணைப்புக்கள்....x